விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே துரிதமான நடவடிக்கை எடுக்க, நான் நேரில் வந்து அந்தப் பெயர்களைக் கொடுக்க உறுதியாக இருக்கிறேன். நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 513, திரு. ஆர். சிங்காரம்—மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

513—

குத்து விளக்கு உற்பத்தி செய்வோருக்கு நியாயவிலை கிடைக்க நடவடிக்கை

*668 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் நாச்சியார் கோவிலில் குத்து விளக்கு உற்பத்தி செய்வோர்க்கு நியாய விலை கிடைக்கவும் கொள்முதல் வசதி செய்து கொடுத்து, அவர்களை நலிவடையாமல் பாதுகாத்திடவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம், கோடிக் கணக்கான ஏழை, எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டுமென்ற கருணையுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு, குத்து விளக்குத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு நியாயமான விலையில் மூலப் பொருட்களைக் கொடுத்து அவர்கள் தயாரிக்கிற அந்தக் குத்துவிளக்குகளை நியாயமான விலையில் வாங்கி, விற்பனை செய்து வருகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் அளித்த விடைக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் அதேநேரத்தில் அதற்கான விளக்கங்களையும் அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். எந்த ஒரு திறப்பு விழாவானாலும் கிரஹப் பிரவேசமானாலும்,

முதலிலே பயன்படுத்துவது குத்து விளக்குத்தான். அதை ஏற்றி வைத்துதான் விழா தொடங்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, தமிழகத்தையே ஒளி யூட்ட, குத்து விளக்கு ஏற்றி வைத்து, ஒளி விளக்காய்ப் பிரகா சித்துக் கொண்டிருக்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர் களுடைய ஆட்சிக் காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) நமது அரசு நாச்சியாராக புரட்சிகரமாகச் செயல்படுகிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், குத்து விளக்கு உற்பத்தியாளர்களின் வாழ்க்கையில் குத்து விளக்கு ஏற்றி வைப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் அதனுடைய முழு விளக்கத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுத்த வினாவின்படி, தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் நாச்சியார்கோவில் என்ற பகுதியில் தமிழக அரசின் பொது நிறுவனமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் குத்துவிளக்கு தயாரிக்கும் தொழிற்கூடம் ஏழை எளிய தொழிளாளர்களுக்காக அவர்கள் தயாரிக்கின்ற குத்து விளக்கிற்கான மூலப்பொருள்களை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் இந்த விடை முடியும்வரை நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: நியாயமான விலையில் மூலப் பொருள்களை அவர்களுக்கு உரிய நேரத்தில் கொடுத்து, தமிழகத்தில் உள்ள ஏழை எளியவர்களின் இல்லங்களில் ஒளி ஏற்றுகின்ற வகையில் அந்த குத்துவிளக்குகளை நியாயமான விலையில் பெற்று அந்த நிறுவனமே விற்பனை செய்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)